**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.1218/2024 நாள்- 08.04.2026

**பி.வா.சா.1. சத்யராஜ்**

**குறுக்கு விசாரணை வாதி தரப்பில்**

துரைராஜ்க்கும், கணபதியம்மாளுக்கும் பிறந்த ஒரே வாரிசு தான் வாதி என்றால் சரிதான். துரைராஜ் இறக்கும் வரை வாதியும், கணபதியம்மாளும் பராமரித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. வாதியின் தாயாரை, துரைராஜ் எந்த காலத்திலும் விவாகரத்து செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. துரைராஜ் விவாகரத்து செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை ஆனால் சமுதாய முறைப்படி விவாகரத்து செய்துவிட்டார். பஞ்சாயத்தில் விவாகரத்து செய்ததற்கான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதில் விவாகரத்திற்கான பணம் கட்டுவார்கள் என்று சொன்னால் நான் மைனராக இருந்ததால் எனக்கு தெரியாது. கணபதியம்மாளை துரைராஜ் பஞ்சாயத்தில் விவாகரத்து செய்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் அதற்கான ஆவணங்கள் இருக்குமா என்று எனக்கு தெரியாது. கணபதியம்மாளை துரைராஜ் எந்த காலத்திலும் கிராம பஞ்சாயத்தில் விவாகரத்து செய்யவில்லை என்றும் அவ்வாறு செய்திருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் கணபதியம்மாள், மருதுபாண்டி என்பவருடன் தொடர்பில் இருந்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மருதுபாண்டியுடன் கணபதியம்மாள் எந்த வருடம் தொடர்பில் இருந்தார் என்று கேட்டால் அப்போது எனக்கு 8 வயது 1997ம் வருடம். கணபதியம்மாள் மருதுபாண்டியுடன் தொடர்பில் இல்லை என்றும் கணபதியம்மாளை கலங்கப்படுத்த வேண்டும் என்று பொய்யான சங்கதிகளை குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு 2 வயது இருக்கும் போது நான் பிறக்கவில்லை. கணபதியம்மாளுக்கும், துரைராஜ்க்கும் பஞ்சாயத்து நடந்து அவருக்கு ஜீவனாம்சமாக

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

ரூ.50000/-மும் நகையும் பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வாதியின் பாகப்பரிவினை வழக்கை பொய்ப்பிக்க வேண்டி பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. கணபதியம்மாளின் உடன்பிறந்த தம்பிக்கு திருமணம் செய்து வைத்த விவரத்தை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே ஆதாரம் இருந்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும், நிரூபணவாக்குமூலத்தில் 25 பவுன் நகையும், ரூ.50,000/- ரொக்கம் கொடுத்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் பெயர் மாரியம்மாள், துரைராஜ்க்கு எனது தாயார் மாரியம்மாள் சட்டப்பூர்வமான மனைவி இல்லை என்றும் துணைவியார் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2- உயில் ஆவணத்தை பதிவு செய்த நோட்டரி பப்ளிக் வழக்கறிஞருக்கும் என் அப்பாவிற்கும் பழக்கம் உண்டா என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2- உயில் ஆவணம் பொய்யான ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2- உயில் ஆவணத்தை வேறொரு நபரை நோட்டரி வழக்கறிஞர் முன்பாக வைத்து பி.வா.சா.ஆ.2- உயில் ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே நோட்டரி பப்ளிக் வழக்கறிஞர் முன்பாக பதிவு செய்திருந்தால் என் அப்பாவின் போட்டோவை ஒட்டி அதில் நோட்டரி வழக்கறிஞரின் முத்திரை இருந்திருக்கும் என்றும் அதனால் தான் என் அப்பாவின் புகைப்படம் பி.வா.சா.ஆ.2-ல் ஒட்டப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2- ல் என் அப்பாவின் புகைப்படம் இல்லை என்று சொன்னால் சரிதான். வாதிக்கு பாகம் கிடைக்கக்கூடாது என்ற நோக்கத்தில் என் அப்பாவிற்கும் தெரியாமல் பி.வா.சா.ஆ.2- வேறொரு நபரை வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே துரைராஜ் சொத்து பூர்வீக சொத்து அல்லது சுயார்ஜித சொத்தாக இருந்தாலும் வாதி முதல் மனைவிக்கு பிறந்தவர் என்பதால் வாதிக்கு தான் முன்னுரிமை உண்டு என்றால் சரியல்ல. வாதி கண்ணன் என்பவருடன் ஓடிப்போய் திருமணம் செய்து கொண்டார். வாதி கண்ணன்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

என்பவருடன் முறையாக திருமணம் செய்துள்ளார் என்றும் நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கும், கண்ணனுக்கும் பிறந்த 2 ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் என்ன படித்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. துரைராஜ் சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றும், மனிதாபிமான அடிப்படையில் வாதி ½ பாகமும், எங்களுக்கு ½ பாகமும் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா துரைராஜ் இறப்பதற்கு முன்பாக சுமார் 50 பவுன் நகை வைத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. துரைராஜ் இறப்பதற்கு முன்பாக எவ்வளவு ரொக்க பணம் வைத்திருந்தார் என்றும் எனக்கு தெரியாது. என் அப்பா LIC-யில் காப்பீடு எடுத்திருந்தார். என் அப்பா SBI வங்கியில் கணக்கு வைத்திருந்தார். என் அப்பா இறக்கும் போது என் அப்பாவின் வங்கி கணக்கில் பணம் இல்லை. வாதிக்கு பணம் எதுவும் கொடுக்காமல் நான்தான் அந்த பணத்தை எடுத்துக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது வாதியின் தாயார் தான் உடன் இருந்து கவனித்து வந்தார் என்றும், என் அப்பாவிற்கு மருத்துவ செலவுகளை கணபதியம்மாள் தான் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4, 5, 6, 7 ல் கண்ட தொகைகள் என் அப்பா கைவசம் வைத்திருந்த தொகைகள் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா வைத்திருந்த தொகையை பகுதியை செலவழித்து விட்டு மீதத்தை நாங்கள் வைத்துக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா பெயரில் உள்ள வங்கி கணக்கை முடிப்பதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான். என் அப்பாவின் வங்கி கணக்கை தற்போது வரை முடிக்கப்படவில்லை. என்னுடைய சொந்த பணத்திலிருந்து என் அப்பாவின் மருத்துவ செலவிற்கு செலவளிக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8, 9 – வழக்கிற்கு பின்பானது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8, 9 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

சரியல்ல. பி.வா.சா.ஆ.10, 18- ஆவணங்கள் மின் இணைப்பு பெறுவதற்காக வாதியின் பெயரை மறைத்து மின் இணைப்பு பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2, 3 தபசில் சொத்துக்களுக்கு என் பெயரில் பட்டா மாற்றம் செய்வதற்கு தாசில்தாரிடம் மனு கொடுத்து மாற்றம் செய்யப்பட்டது. வாதியையும் அவரது தாயாரையும் சேர்க்காமல் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். வாதியின் பெயரை வேண்டுமென்றே மறைத்து மனு கொடுத்து பட்டா பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பட்டா மாற்றம் செய்வதற்கு வாதியிடம் ஆட்சேபணை இல்லை என்று குறிப்பு வாங்கியிருக்க வேண்டும் என்றும் அவ்வாறு வாங்கிய பட்டா மோசடியானது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.15 முதல் 17 வரையிலான ஆவணங்கள் 4, 6 வது தபசில் சொத்துக்களைப் பொறுத்து பட்டா மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதியின் பெயரை வேண்டுமென்றே மறைத்து மனு கொடுத்து பட்டா பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பட்டா மாற்றம் செய்வதற்கு வாதியிடம் ஆட்சேபணை இல்லை என்று குறிப்பு வாங்கியிருக்க வேண்டும் என்றும் அவ்வாறு வாங்கிய பட்டா மோசடியானது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.18 – கட்டிடம் கட்டுவதற்கு வாதியின் ஒப்புதல் பெறவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.20- வாதியின் பெயரை வேண்டுமென்றே மறைத்து மனு கொடுத்து பட்டா மாறுதல் உத்தரவு பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பட்டா மாறுதல் உத்தரவு பெறுவதற்கு வாதியிடம் ஆட்சேபணை இல்லை என்று குறிப்பு வாங்கியிருக்க வேண்டும் என்றும் அவ்வாறு வாங்கிய பட்டா மாறுதல் உத்தரவு மோசடியானது என்று சொன்னால் சரியல்ல. அதனால் பி.வா.சா.ஆ.20 ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வாதிக்கு பங்கு கிடைக்கக்கூடாது என்ற காரணத்திற்காக என் பெயருக்கு பட்டாவை மாற்றி செயல்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு துரைராஜ் சொத்துக்களில் சட்டப்படி ½ பாகம் கிடைக்கக்கூடியது என்றும் என்னுடைய வாதம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.21- வாரிசு

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

சான்றிதழ் கேட்டு இராஜபாளையம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 முதல் 20 வரையிலான ஆவணங்கள் தாவா வழக்கிற்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.